1, Story of Batrakaliamman as taken from the Kanthapurana

சிவன்மனைவியாகிய பார்வதி ஒருபாவம் நிவர்த்தி
செய்வதற்காக சிவபெருமானிடம் விடை பெற்று
காளிந்தி என்ற ஆற்றுக்கு சென்று வெண்தாமரை
மீது சங்கினு உருவம் எடுத்து சிவபெருமானை
நோக்கி தவம் செய்தாள். இப்படியிருக்கும்போது
ஒருநாள் பிரமாவின் (நான்முகன்) மகன் தக்கன்
என்பவன் அவன்மனைவி வேதவல்லியும் குளி
ப்பதற்கு காளிந்தி ஆற்றுக்கு சென்றார்கள்.
அப்போது தக்கன் வெண்தாமரைமேல் சங்கினு
உருவத்தில் இருக்கும் பார்வதியை பார்த்து
தன்னுடைய அறிவால் பார்வதியென்று தெரிந்து
போய் இரண்டு கையிலும் எடுக்கும் போது
சங்கினு உருவத்தில் இருந்து பார்வதி குழந்
தை வடிவாக மாறியது. தக்கனும் வேதவல்லியும்
குழந்தையை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச்
சென்று குழந்தையை வளர்த்தி வந்தார்கள்.
குழந்தைக்கு ஐந்து வருஷம் முடிந்து ஆறு
வது வருஷம் பிறந்ததும். யாகசாலை உண்டு
பண்ணி சிவபெருமானை நோக்கி தவம் செய்
ய ஆரம்பித்தது. பார்வதியாகிய குழந்தை
இப்படி தவம் செய்து கொண்டிருக்கும் போது.
சிவபெருமான் ஒருநாள் பார்வதியின் முன்
தோன்றி பெண்ணே நான் உன்னை திருமணம்
செய்து கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு
மறைந்தார். இதை பார்த்துக்கொண்டிருந்த

பார்வதியின் தோழிகள் தக்கனிடம் சென்று நடந்த உண்மையை சொன்னார்கள். தக்கன் உடனே சந்தோஷமடைந்து. ஒரு குறிப்பிட்ட நாளில் கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தான் குறிப்பிட்ட நேரத்தில் சிவபெருமான் தோன்றி. பார்வதியை கல்யாணம் செய்து விட்டு தன்னுடன் அழைத்துச் செல்லாமலே சென்று விட்டார். இதை அறிந்த தக்கன் சிவன் நம் மகளை கல்யாணம் செய்து கூட்டிச் செல்லாமல் சென்று விட்டார். இவ்வளவு தேவர்கள் முன் நம்மை அவமானத்துக்குள்ளாக்கி விட்டான் என்று தக்கன் சிவபெருமான் மேல் அளவில்லாத கோபம் கொண்டான். பார்வதி சிவபெருமான் தன்னை அழைத்துச் செல்லாமல் சென்று விட்டார் என்று கவலை கொண்டிருப்பதை தாயார் வேதவல்லி பார்த்து பார்வதி நீ முன் போல் சிவபெருமானை நோக்கி தவம் செய் மறுபடியும் உன்னை வந்து அழைத்து செல்வார் என்றான். பார்வதி உடனே யாக சாலை ஏற்படுத்தி சிவபெருமானை நோக்கி தவம் செய்து கொண்டிருக்கும் போது, ஒரு நாள் சிவபெருமான் பார்வதியின் எதிரில் வந்து தக்கனுக்கு தெரியாமல் பார்வதியை

3.

அழைத்துக் கொண்டு கைலாயம் சென்றார். இதை பார்வதியின் தோழிகள் பார்த்து தக்கனிடம் சென்று நடந்த உண்மைகளை சொன்னார்கள். இதைக் கேட்ட தக்கன் சிவன்மேல் கோபம் கொண்டான். சிவபெருமானை வஞ்சம் தீர்ப்பதற்காகவும். இவனுக்குள்ள சக்தி பராக்கிரமம் இவைகளை எல்லாம் தான் அடைய வேண்டுமென்று கர்வம் கொண்டு அன்றிலிருந்து சிவபெருமானை மனதில் நினையாமல் பெரியயாக சாலை உண்டு பண்ணி வேள்வி செய்யத் தொடங்கினான். மகன் வேள்வி செய்வதை தந்தையாகிய பிரம்மாவும் மற்றுமுள்ள தேவர்கள் எல்லாம் வந்து எவ்வளவோ தடுத்துக் கூறியும் தக்கன் கேட்கவில்லை. இப்படி தக்கன் வேள்வி செய்து கொண்டிருக்கும் போது உமாதேவியாகிய பார்வதி பார்த்து. சிவபெருமானிடம் சென்று நாதா என் தந்தை செய்யும் வேள்வியை நான் போய் பார்த்து வருகிறேன் விடை கொடுங்கள் சுவாமி என்றாள். இதைக் கேட்ட சிவ

பெருமான் பார்வதியை நோக்கி நீ உன் தந்தை
யின் வேள்வியை பார்க்க சென்றால் அவன்
உன்னை மதிக்க மாண்டான் நீ அவமானம்
அடைந்து தான் திரும்புவாய். ஆகையால்
நீ அங்கு செல்வது நல்லதல்ல என்றார்.
இதைக் கேட்ட பார்வதி நாதா அப்படி
ஒன்றும் நடக்காது நான் போய் பார்த்து
விட்டு சீக்கிரம் வந்து விடுகிறேன். விடை
கொடுங்கள் சுவாமி என்றாள். சரி உன் இஷ்
டம் போய்விட்டு சீக்கிரம் வந்து விடு
என்று விடை கொடுத்தார். பார்வதி
புறப்பட்டு தக்கன் வேள்வி செய்யும்
யாகசாலையை அடைந்தாள். தக்கன்
பார்வதி வந்திருப்பதைக் கண்டதும்
கோபத்துடன் சிவன் மனைவியாகிய நீ
இங்கு எதற்கு வந்தாய். உன்னை இங்கு
அழைத்தவர் யார் நீ இந்த இடத்தை விட்டு
உடனே திரும்பி போய் விடு என்றான் தக்கன்.
இதைக் கேட்ட பார்வதி நீ இந்த வேள்வி
வளர்த்தும் போது என்னையோ சிவ பெரு
மானையோ மனதில் நினைக்கவில்லை மற்ற
எல்லா தேவர்களுக்கும் வேள்வியில்

அவிப்பாகம் கொடுத்தாய். இருந்தும் என்னை
நீ வேள்விக்கு அழைக்காமலே நான் வந்
ததற்கு என்னையும் மிரட்டுகிறாய் ஏன்
இப்படியெல்லாம் பேசுகிறாய் உன் எண்
ணந்தான் என்ன சொல் என்று பார்வதி
கேட்டாள். தக்கன் பார்வதியை பார்த்து
(திருமால்) கிருஷ்ணர் நான்முகன் எல்லோரும்
என்னை மதிக்கிறார்கள் அப்படியிருக்க.
மாட்டின் மேல் ஏறுகின்ற உன் கணவன்
என்னை மதிக்கவில்லை. அவன் மனைவியாகி
ய நீயும் என்னை மதிக்கவில்லை. ஆகை
யால் இந்த வேள்வியில் உங்களுக்
கு சிறிதேனும் அவிப்பாகம் கொடுக்
க மாட்டேன் என்றான். இதைக் கேட்
ட பார்வதிக்கு அளவு கடந்த கோபம்
உண்டாகியது. பூமிகள் நடுங்கியது. திக்கு
யானைகளும் நடுங்கியது நான்முகனும் திரு
மாலும் நடுங்கினார்கள். பார்வதி தக்கனைப்
பார்த்து. கோபத்துடன் நீ என்னை பேசிய
தற்காக நான் கவலைப்படவில்லை ஆனால்
என் நாதனை நீ இகழ்ந்து பேசியதை
என்னால் பொறுக்க முடியாது

6.

உலகிற்கெல்லாம் அந்த சிவபெருமானே
பெரிய கடவுள். அப்பேர்ப்பட்ட சிவனை
நீ மதிக்காமல் இகழ்ந்து பேசுகிறாய்.
அவரை இகழ்ந்து பேசியவர்கள் இந்த
உலகில் யாரும் உயிருடன் இருக்க முடி
யாது. அதுபோல் நீயும் அவரை இகழ்ந்து
பேசிவிட்டாய். நீ இந்த பழியிலிருந்து
பிழைக்க முடியாது. என்று கோபத்து
டன் சொல்லிவிட்டு பார்வதி கைலாசம்
சென்றாள். சிவபெருமானிடம் சென்று
நாதா தக்கனுடைய வேள்வியை உடனே
தாங்கள் அழிக்க வேண்டும் என்று வேண்
டிக் கொண்டாள். சிவபெருமான் சரி என்
று நெற்றிக்கண்ணை திறந்தார் அதிலிருந்து.
ஆயிரம் தலையும் ஆயிரம் முகங்களும்
ஒவ்வொரு முகத்திற்கும் மூன்று கண்களும்
இரண்டாயிரம் கைகளும். வாயில் கொடிய
சிங்க பற்களும் நிறைந்த அகோர ரூபத்
துடன் வீரபத்திரக் கடவுள் தோன்றினார்.
பார்வதி தன்னுடைய கோபத்தால் ஆயிரம்
தலையும் இரண்டாயிரம் கைகளும்.

உள்ள அகோர ரூபத்துடன் பத்ரகாளி தோன்றினாள் இந்த பத்ரகாளி வீரபத்ர கடவுளுக்கு மனைவியாக அவதரித்தாள். வீரபத்ர கடவுளும் பத்ரகாளியும். சிவபெருமானை நமஸ்காரம் செய்து. எங்களை எதற்கு சிருஷ்டித்தீர்கள் என்று கேட்டார்கள். இதற்கு சிவ பெருமான். வீரபத்திரா தக்கன் என்பவன் எங்கள் இருவரையும் நினையாமல் வேள்வி யாகம் செய்கிறான். நீங்கள் இருவரும் அந்த வேள்விச் சாலைக்கு சென்று வேள்வியை அழித்து தக்கனையும் அங்கு இருப்பவர்கள் எல்லோரையும் கொன்று வாருங்கள் இதற்காகவே உங்கள் இருவரையும் படைத்தோம் என்றார்.

இதைக் கேட்ட வீரபத்ரக் கடவுளும் பத்ரகாளியும் தக்கனுடைய யாகசாலைக்கு சென்றார்கள். சென்று தக்கனுடன் சண்டை செய்யும் போது. திருமாலும் தேவர்களும் முனிவர்களும் தக்கனுக்கு சண்டையில் உதவி செய்தார்கள். சண்டையில் திருமால் ஒருவர் தவிர மற்ற எல்லா தேவர்களையும் வீரபத்ரசாமி கொன்று விட்டார் தக்கனும் இறந்து விட்டான். மறுபடி வீரபத்ர சாமிக்கும் திருமாலுக்கும் சண்டை ஏற்பட்டது. சிவபெருமான் வீரபத்ர சாமிக்கு ஒரு தேர் உண்டாக்கினார்.

பிர்மா எழுந்து தேர் ஓட்டும் வேலையை ஏற்றுக் கொண்டார். வீரபத்ரக் கடவுள் தேரின் மேல் நின்று சண்டை செய்தார். கடைசியாக சண்டையில் திருமால் தோல்வி அடைந்தார். திருமால் வீரபத்ர சுவாமியிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். சிவபெருமானும் பார்வதியும் அந்த இடத்திற்கு வந்து பார்த்து பார்வதி சிவபெருமானிடம் இறந்தவர்களை எழுப்பி விடுமாறு வேண்டிக் கொண்டாள். சிவபெருமான் பார்வதியின் வேண்டுகோளுக்கு இணங்கி. தக்கன் மற்றும் தேவர்கள் எல்லோரையும் உயிர் கொடுத்து எழுப்பினார். பிரமா தக்கனை நோக்கி. சிவபெருமானை பக்தியுடன் நேசிக்கும்படி சொன்னார். சிவபெருமானை இகழ்ந்து பேசுகிறவர்கள் எல்லோருக்கும். இது தான் தண்டனை என்று அறிவுரை. வழங்கினார்.